VISIT…



கவிப்பேரரசுவிற்கு ஒரு சிட்டுக்குருவியின் சிறிய அன்பளிப்பு....

(செப்டம்பர் 11,2005....

தேசியகவி பாரதியின் நினைவுநாளின் பொன்மாலையில்
கவிப்பேரரசு வைரமுத்துவைச் சந்தித்தேன்....

அவரது சொற்பொழிவில் இதயம் நனைந்தேன்...

அந்த பெருங்கவிஞனின் வார்த்தைகள் வீடு வந்த
பின்னும் என் மனதை தாலாட்டிக் கொண்டிருந்தன...

அந்த வைர நிமிடங்களில் எனக்குள் தோன்றிய

வரிகள் இங்கே ...)

தமிழின் மறுபெயரானவனே!

உன்னைப் பற்றி
எழுத நினைத்தால்
என் பேனா மயிலிறகாகி
விடுகிறது...
என் காகிதம் சிறகாகி
விடுகிறது..

உன்னைப் பற்றி
நினைத்தாலே
தமிழின் வாசம் காற்றில்
மணக்கிறது...

உன் கவிதைகள் படித்த
பின்புதான் இங்கே
பலருக்கு தமிழின்
சுவை புரிந்தது.

உன் தாய் உனக்கு
பாலூட்டினாளா
இல்லை
தமிழ் ஊட்டினாளா?

உன் கவிதைகள்...

தமிழ்த்தாயின் கீரிடத்தில்
வைரமாய் மின்னும்
'வைர'க்கற்கள்..

உன் கவிதைகள்..

மனிதம் மறந்த
மனிதர்களின் மனதில்
ஆணிகள் அறையும்...

இதயம் இழந்த
காதலர்களின் மனதில்
பூக்கள் செறியும்..

தேசம் மறந்த
நல்லவர்களின் மனதில்
தீயாய் எரிக்கும்..

பாசம் மறந்த
பிள்ளைகளின் மனதில்
முள்ளாய் உறுத்தும்...

உன் பாடல்கள்...

பொன்மாலைப் பொழுதில்
உன் பேனா சிந்திய
துளி,மழையாய்
எங்கள் உள்ளம்
நனைத்ததே!

பூங்காத்து திரும்புமா
என்று நீ கேட்ட
நாளில் இந்தியர்களின் பார்வை
தமிழ் மீது திரும்பியதே!

காதல் ரோஜாவே
என்று நீ உருகிய
நாளில் காதலே எங்கள்
சுவாசமாகியதே!

சர்க்கரை நிலவே
என்று நீ பாடிய
நாளில்
நிலவே சர்க்கரையாய்
எங்கள் செவிகளில்
இனித்ததே...

விடைகொடு எங்கள்
நாடே என்று உன்
பேனா கண்ணீர்வடித்த
நாளில் எங்கள்
ஈழத்துச் சகோதரனின்
கண்ணீரை எங்கள் இதயம்
உணர்ந்ததே!

உன் கவிதைப்பூக்கள்...

"வைகறை மேகங்கள்"
தமிழ்த்தாயின் மங்கிய
முகத்தினை பொன்முகமாய்
மிளிர வைத்தது..

"இந்தப் பூக்கள்
விற்பனைக்கல்ல"
கவிபாட
பாடுபொருள் இல்லாமல்
கவிஞர்களை திரிய
வைத்தது...

"தண்ணீர் தேசம்"
உலகில் அதிசயம்
எட்டு அதில்
முதல் அதிசயம் கடல்
என்று வியக்க
வைத்தது.

"பெய்யெனப் பெய்யும்
மழை"
தமிழ் படிக்காதவரையும்
கவி படிக்க வைத்து
உயிர் நனைய வைத்தது

"கள்ளிக்காட்டு இதிகாசம்"
கள்ளிக்காட்டில் ஓணான்களையும்
சில்வண்டுகளையும் மட்டுமே
பார்த்து வந்த சில
மனிதர்கள்
கள்ளிக்காட்டிலேயும்
மனிதர்களுண்டு அவர்களுக்கு
மனசும் உண்டு என்று
உணர வைத்தது.

உன்னை நான் சந்தித்த
நாள் பாரதியின்
நினைவு நாள்.

பாரதி உன் உருவில்
என் முன் அமர்ந்திருந்தான்.

நீ
தமிழ் பேசினாய்
என் செவிகளில்
அது இசையாய்...

நீ
கவிதை பேசினாய்
என் உயிரில்
அது விதையாய்..

வீடு திரும்புகையில்
திருவிழாவில்
தொலைந்த குழந்தையாய்
உன் சொற்களுக்குள்
தொலைந்து தனித்து
நடந்து வந்தேன்.

நீ பிறந்த நூற்றாண்டில்
பிறந்ததால்
பெருமை கொண்டு
நடக்கிறேன்..

தென்றல் மெதுவாய்
என் செவிகளில்
சொல்லி விட்டுச்செல்கிறது

"தமிழகத்தில் இவன்
பிறந்ததால் தமிழ்
பெருமைகொள்கிறது"
என்று!!

நன்றியுடன்,
நிலாரசிகன்.

மின்னஞ்சல்:- nila_raseegan@yahoo.co.in
குழுமம்:-
http://in.groups.yahoo.com/group/nilaraseegankavithaigal/